258, எம் வின்செனட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

# யூனிலீவர் நிறுவனத்தின் ஹொரணை தொழிற்சாலைக்கு மதிப்புமிக்க ISO 14001:2015 சுற்றாடல் முகாமைத்துவ கட்டமைப்பு சான்று அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது

- நிலைபேற்றியல் மீது நிறுவனத்தின் அர்ப்பணிப்புடனான உறுதிப்பாட்டின் மூலம் சுற்றுச்சூழல் மீதான பொறுப்பினை நிலைநிறுத்துவதில் மேலும் ஒரு படி முன்னேற்றம்

**கொழும்பு, ஜுன் 06 2022:** யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம், இலங்கை தரக்கட்டளைகள் நிறுவனத்திடமிருந்து ஹொரணையைத் தளமாகக் கொண்ட உற்பத்தி தொழிற்சாலைக்காக ISO 14001:2015 தரச்சான்று அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதாக இன்று அறிவித்துள்ளது. சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்த தரச்சான்று அங்கீகாரமானது ஒரு விரிவான, முழுமையான சுற்றாடல் முகாமைத்துவக் கட்டமைப்பு மூலம், அதன் செயல்பாடுகள் மூலமாக சுற்றுச்சூழலில் அது விளைவிக்கும் தாக்கத்தை அடையாளம் காணவும், நிர்வகிக்கவும் மற்றும் குறைக்கவும் நிறுவனத்தின் அர்ப்பணிப்புடனான உறுதிப்பாட்டை வெளிக்காண்பிக்கின்றது.

**யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் வழங்கல் சங்கிலியின் பணிப்பாளரான ஜெரார்ட் இருதயராஜ்** அவர்கள், இச்சான்று அங்கீகாரம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், ''*மிகுந்த விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்புடன், எங்களின் ஹொரணை தொழிற்சாலையானது இணக்கமின்மை தொடர்பான எவ்விதமான குறைபாடுகளுமின்றி இந்தச் சான்று அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. நிலையான வணிக நடைமுறைகள் மூலம் சுற்றுச்சூழலைக் காப்பதற்கும், பாதுகாப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகின்ற ஒரு நிறுவனம் என்ற வகையில், இது எங்களின் நீண்ட கால இலக்குகள் மற்றும் குறிக்கோளை நோக்கிய மிகப்பெரிய வெற்றியாகவே கருதுகிறோம்,*'' என்று குறிப்பிட்டார்.

யூனிலீவர் நிறுவனத்தின் ஹொரணை தொழிற்சாலை அதன் செயற்பாடுகளில் சாதகமான மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம் அதன் சுற்றாடல் முகாமைத்துவ கட்டமைப்பை வெற்றிகரமாகக் கடைப்பிடித்துள்ளது. கடந்த 9 ஆண்டுகளில் (2012-2021) பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தில் 97% குறைப்பு, ஒட்டுமொத்த எரிசக்தி பயன்பாட்டில் 68% குறைப்பு மற்றும் ஒட்டுமொத்த கழிவு உற்பத்தியில் 68% குறைப்பு ஆகியன இது தொடர்பான முக்கியமான சாதனைகளில் அடங்கியுள்ளன.

மேலும், இந்த தொழிற்சாலை அதன் நீர் அடிச்சுவட்டைத் தணிக்கும் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இதன் விளைவாக வருடாந்த நீர் பயன்பாட்டில் (2012-2021) 78% குறைப்பு ஏற்பட்டுள்ளது. யூனிலீவர் நிறுவனம் பல்வேறு நீர் நுகர்வைக் குறைத்து உச்சப்பயனைப் பெறும் மேம்படுத்தல் திட்டங்கள் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு மூலம் இந்த குறிப்பிடத்தக்க சாதனையை நிலைநாட்டியுள்ளது. அதன் செயல்பாடுகள் மூலமாக ஆண்டுக்கு 25,000 தொன் மழைநீரையும் அது சேகரிக்கிறது.

ISO 14001:2015 தரச் சான்று என்பது ஒரு நிறுவனம் அதன் சுற்றுச்சூழல் செயல்திறனை மேம்படுத்தவும், அதன் விதிமுறை இணக்கப்பாட்டுக் கடமைகளை நிறைவேற்றவும் மற்றும் அதன் சுற்றுச்சூழல் தொடர்பான நோக்கங்களை அடையவும் பயன்படுத்தக்கூடிய சுற்றுச்சூழல் முகாமைத்துவ கட்டமைப்புக்கான தேவைகளை நிர்ணயிக்கின்ற ஒரு சர்வதேச தரச்சான்று அங்கீகாரமாகும். நிலைபேற்றியலில் சுற்றுச்சூழல் பிரிவுக்கு பங்களிக்கும் ஒரு முறையான வழிமுறையில் அதன் சுற்றுச்சூழல் பொறுப்புகளை நிர்வகிக்கும் நிறுவனத்தின் திறனை இந்த தரச்சான்று அங்கீகரிக்கிறது.